குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.71/2020

அ.சா.6

2026–ம் ஆண்டு பிப்ரவரி 23–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்கரபாணி | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 07.32 மணி,

Accused Arivazhagan absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் தர்மபுரி மாவட்டத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து 2023 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 18.12.2018 ஆம் தேதி நான் ஓமலூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, அன்றைய தினம் உதவி ஆய்வாளர் தினேஷ் என்பவர் நிலைய குற்ற எண்.753/2018 சட்டப்பிரிவுகள் 279, 338 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணை முடித்து மேற்படி வழக்கின் சட்டப்பிரிவுகள் 279, 304(எ) ஆக மாறுதல் செய்து மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை பார்வையிட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. பின்பு, 03.01.2019 ஆம் தேதி விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று, மோட்டார் வாகன ஆய்வார் முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **அந்த லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், அந்த இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 20:33:42 +0530

3. சம்பவத்தில் காயமடைந்த கணேசன் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து, முதல் சிகிசசை அளித்த ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த ஓமலூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.**) சம்பவத்தில் காயமடைந்த கணேசன் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து, மேல்சிகிசசை அளித்த மணிபால் மருத்துவமனை மருத்துவர் மகாகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த மணிபால் மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.12 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.**)

4. பின்பு, விபத்தில் காயமடைந்து இறந்துபோன கணேசன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை ஆய்வு செய்த சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் அருள்செல்வன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். (**அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

5. பின்பு, பிரேத பரிசோதனைக்கு உடன் சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் தினேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, வழக்கின் புலன் விசாரணை முடித்து, சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியின் மீது 279, 304(எ) இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

6. இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு கோப்பினை எனது பார்வைக்கு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 போலிசார் விசாரணையில் விபத்தில் இறந்த கணேசன் TN 30 BV 344 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் தாரமங்கலம் நோக்கி ரோட்டின் இடதுபக்கம் செல்லாமல், ரோட்டின் வலதுபக்கம் ஓட்டிச்சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரி.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 20:33:46 +0530

7. சம்பவம் நடந்த காலக்கட்டத்தில் சம்பவம் நடந்த சாலை சென்டர் மீடியன் இல்லாத இருவழி சாலை என்றால் சரி. இவ்வழக்கு சம்பவம் சாலையின் மேற்கு திசையில் நடந்துள்ளது என்றால் சரி. இவ்வழக்கு விபத்தில் இறந்த கணேசன் சம்பவத்தின்போது, சாலை விதிகளை பின்பற்றாமல் சாலையின் வலதுபுறம் பயணித்துள்ளார் என்றால், சாலையின் வலதுபுறம் சென்றார், ஆனால், சாலைவிதிகளை பின்பற்றாமல் செல்லவில்லை.

8. அ.சா.1 போலிசார் விசாரணையின்விபத்து ஏற்படுத்திய லாரி தாரமங்கலத்தில் இருந்து ஓமலூர் நோக்கி வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் சாலையின் ஓரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இவ்வழக்கு விபத்தில் இறந்த கணேசன் சம்பவத்தின்போது, சாலை விதிகளை பின்பற்றாமல் சாலையின் வலதுபுறம் பயணித்து எதிரே வந்த லாரியின் மீது தாமாக மோதி விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

9. இருசக்கர வாகனம் எதிரே வந்த லாரியின் இடதுபக்கம் மோதியதால் மேற்படி லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் லாரியின் இடதுபக்கம் சேதம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சேதம் இருப்பது உண்மைதான், ஆனால், இருசக்கர வாகனம் லாரியின் மீது மோதவில்லை. லாரிதான் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியின் என்ன லோடு இருந்தது என்றால், தெரியவில்லை. இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டிச்சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

10. இவ்வழக்கு சம்பவம் 17.12.2018 ஆம் தேதி இரவு சுமார் 09.30 மணிக்கு நடந்தது என்றால் சரி. லாரியின் அஜாக்கிரதையினால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், அ.சா.5 சரிவர விசாரணை செய்யாமல் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்த ஆவணங்களின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த கணேசன் நஷ்டஈடு பெறவேண்டி அவருக்கு சாதகமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 07.53 மணி.**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.23 20:33:51 +0530